**தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மன்னார் மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2019 மே 30 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஒக்டோபர் 14 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதி நிலமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மன்னார் மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தேன்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீனாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வுக்கு முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை எனவே முன்னைய ஆண்டிற்குரிய தொகைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளன.

(ஆ) மன்னார் மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மாவட்டச் செயலகத்திற்குரிய வருமானங்கள்தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) வருமானங்கள் கட்டுநிதியாக கணக்கிடப்பட்டமை** | | |
| (i) பொது கணக்குகள் சுற்றறிக்கை இல 264/2018 ஆம் பிரிவு 7(i) இன் 21 நவம்பர் 2018 இற்கு முரணாக ஐந்து பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட ஆண்டுக்கான வருமானங்கள் ரூபா 37,525,067 பெறுமதியானது நிதி செயலாற்றுகைக்கூற்றுகளில் காட்டப்படாமல் கட்டுநிதி சீராக்கல் கணக்கினுள் கொண்டு வரப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானங்களை நிதி செயலாற்றுகை கூற்றில் ACA I இன் கீழ் உள்ளடக்கக்கூடாது என்பதனால் திரட்டப்பட்ட வருமானத்தை திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதியாக கருதி ACA II இல் காட்டப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்தின் மூலதன சொத்துக்களின் விற்பனை மூலம்பெறப்பட்டரூபா 147,220 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | முதலீட்டு வருமானமாக காட்டப்பட வேண்டியிருந்தும் வருமானமல்லாத வகுதிக்குள் காட்டப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் சரியான வகுதிக்குள் காட்டப்படும் |

## (ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

மாவட்டச் செயலகத்திற்குரிய முற்பணக் கணக்கு மீதிகளை கணக்காய்வு செய்த போது கீழ்குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஆறு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவை ரூபா 604,106 ஒன்று தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக உள்ள போதும் தாபன விதிக்கோவை அத்தியாயம் xxiv பிரிவு 4 இன் பிரகாரம் அறவிட்டுக் கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவைக்கு அமைய அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஓய்வூதியம் வழங்கப்படும் போதும் பிணையாளரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

## (இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

மன்னார் மாவட்டச் செயலகத்திற்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்காய்வு செய்த போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதி செயலாற்றுகைக் கூற்று படி மொத்த மூலதன சொத்துக்களின் கொள்வனவுகளின் மீதி ரூபா 37,675,623 ஆக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் (ACA – 6) நிதியல்லா சொத்துக்கள் பற்றிய கூற்றின் படி மொத்த மூலதன சொத்து கொள்வனவானது ரூபா 7,675,628ஆக காணப்பட்டது. | இம் மீதிகளை இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நடைமுறையாண்டின் இறுதிக் கணக்குகளில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

(ஈ) **கட்டுநிதி மீதி**

மன்னார் மாவட்டச் செயலகத்திற்குரிய கட்டுநிதி மீதிகள்தொடர்பாக கணக்காய்வு செய்த போது கீழ் குறிப்பிட்ட விடயம் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதிப்பாய்ச்சல் கூற்றின் படி திறைசேரிக்கு மீளளிக்கப்பட்ட கட்டுநிதியானது பூச்சிய மீதியாக காட்டப்பட்டிருந்த போதிலும், குறிப்புக்களின் (ACA – 03) படியாக திறைசேரிக்கு மீளளிக்கப்பட்ட பணமாக ரூபா 2,002,408,271 காட்டப்பட்டுள்ளது. | மீதிகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் | திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட பணி முற்பணம் இல்லாத போதும் தவறுதலாக ACA 3 இல் சேர்க்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி முகாமைத்துவம்

### 2.1 செலவின முகாமைத்துவம்

மன்னார் மாவட்டச் செயலகத்தின் செலவின முகாமைத்துவம் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | குறித்த நிதியாண்டில் மாவட்டச் செயலகத்தின் 6 எண்ணிக்கையான நிதியேற்பாடுகள் தொடர்பில் ரூபா 16,989,843 ஆனது 7 வீதம் தொடக்கம் 27 வீதம் வரை சேமிப்பாகக் காணப்பட்டிருந்தன. | வினைத்திறனான நிதி பாதீட்டு கட்டுப்பாட்டு மேற்கொள்ளப்பட வேண்டும் | எதிர்காலத்தில் பாதீடு தயாரிக்கும் போது சேமிப்புக்களை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| (ஆ) | 05 செலவின விடயத்திற்காக பாதீடு செய்யப்பட்ட தொகை ரூபா 4,800,000 உரிய செலவின விடயத்திற்காக பயன்படுத்தப்படாமல் வகை மாற்றத்தினூடாக 50 சதவீதம் 03 வேறு செலவின விடயத்திற்கு ரூபா 2,271,281 மாற்றப்பட்டிருந்தமையானது | வினைத்திறனான நிதி பாதீட்டு கட்டுப்பாட்டு மேற்கொள்ளப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது எதிர்காலத்தில் பாதீடு தயாரிக்கப்படுகையில் சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டு தயாரிக்க உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பாதீட்டினை வினைத்திறனான முறையில் தயாரிக்காமையை வெளிப்படுத்துகின்றது. | | |
| (இ) | 03 செலவின விடயத்திற்காக பாதீடு செய்யப்பட்ட தொகை ரூபா 10,900,000 உரிய செலவின விடயத்திற்கு போதியதாக காணப்படாமையினால் 25 சதவீதத்திற்கு மேற்பட்ட 03 செலவின விடயங்கள் ரூபா 3,123,281 பெறுமதி வகைமாற்றத்தினூடாக பெறப்பட்டிருந்தன. | வினைத்திறனான நிதி பாதீட்டு கட்டுப்பாட்டு மேற்கொள்ளப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிகாலத்தில் பாதீடு தயாரிக்கப்படுகையில் சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டு தயாரிக்க உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | தங்கள் பரிந்துரைக்கு ஏற்ப எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன் பிரகாரம் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்கல் இடம்பெறுவதாககணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.6 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்குக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது எதிர் காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் சீர் செய்யப்படும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணங்காமை | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | | | | |
| | (i) நிதி ஒழுங்கு விதி 570, 571 | 2,309,500 | 31 எண்ணிக்கையான காலங்கடந்த வைப்பு | உரிய நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்புகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| | (ii) நிதி ஒழுங்கு விதி 137, 138 | 3,177,511 | ஒப்பந்த வேலைகள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளாது மடு பிரதேச செயலகத்தினால் ஐந்து காசோலைகள் வரையப்பட்டிந்தது. | நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் | திட்டத்திற்கான முழு மதிப்பீட்டு தொகையும் பயனாளரிடமிருந்து பெறப்பட்டதன் பின்னரே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் செயற்பாட்டு திட்டத்திற்கமைய வேலைகள் மேற்கொள்ளப்படுவது பொதுவான நடைமுறையென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | அமைச்சுக்களின் சுற்றறிக்கைகள், ஏற்பாடுகள், பிரமாணங்கள் | | | | |
| (i) | சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2016 பெப்ரவரி 09 ஆந் திகதிய MR/4/31 ஆம் இலக்க கடிதம் | 95,072 | நானாட்டான் பிரதேச செயலகத்தினால்4 வகையான வாழ்வாதார உதவித்திட்டங்கள் மூலம் 45 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித்திட்டம் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தன | உரிய சுற்றறிக்கையின் அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது காலக்கிரமத்தில் உரிய பதில் வழங்கப்படும் |
| (ii) | சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2016 பெப்ரவரி 09 ஆந் திகதிய MR/4/31 ஆம் இலக்க கடிதத்தின் 3 வது பந்தியிலும் அரசாங்க அதிபரால் NN/GA/PL/COM/R/00 /2016 ஆம் இலக்க 2017ஆம் திகதிய கடிதம் | 685,000 | மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் எட்டுபயனாளிகளுக்கு கால்நடைகள் வழங்க வேண்டிய போதிலும் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கையின் அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | உரிய அலுவலர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு இவ்வாறான தவறுகள் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது |
| (iii) | வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளரின் 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 13,212,500 | i. நானாட்டான் பிரதேச செயலகத்தினால் 151 பயனாளிகளுக்கான மாடுகள் விலை நிர்ணயம் செய்யப்படாது முருங்கன் அரச கால்நடை வைத்தியரால் கொள்வனவு | உரிய சுற்றறிக்கையின் அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | உரிய பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இவ்வாறான தவறுகள் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 11,900,000 | i. செய்யப்பட்டிருந்தது. | | |
| | | | iii. மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் 136 கறவை மாடுகள் விலை நிர்ணயம் செய்யப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது | | |
| (iv) | வடக்குமாகாண கால்நடை உற்பத்திச் சுகாதரத் திணைக்கள மாகாணப்பணிப்பாளரின் 2014ஆம் ஆண்டு செப்ரம்பர; 09ஆந் திகதி 04/2014 ஆம் இலக்க சுற்றுநிரூபம் | 199,800 | i. மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் 02 பயனாளிகளுக்கு ஆடுகள் விலை நிர்ணயம் செய்யப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது | உரிய சுற்றறிக்கையின் அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | உரிய பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| | | 2,160,000 | ii. நானாட்டான் பிரதேச செயலகத்தினால் 24 பயனாளிகளுக்கு ஆடுகள் விலை நிர்ணயம் செய்யப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது | | |
| (v) | வடக்குமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாகாணப்பணிப்பாளரின் 2016.07.05 ஆந் திகதிய NP/26/02/C/R/2016/02 இலக்க சுற்றுநிருபம் | 161,500 | மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் அதிகரித்த விலையில் 17 பயனாளிகளின் 1,700 கோழிக்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது | உரிய சுற்றறிக்கையின் அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டதுநடவடிக்கை எடுக்கப்படுகின்றது காலக்கிரமத்தல் பதில் வழங்கப்படும் |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நானாட்டான், முசலி கால்நடை வளர்ப்போர் சங்கத்திற்கு சேவைக் கட்டணமாக ரூபா 500 வழங்கப்பட வேண்டும் என எந்தவிதமான உடன்படிக்கைகளோ ஆவணங்களோ இல்லாது கறவை மாடுகள் வழங்கப்பட்ட பயனாளிகளிடமிருந்து நானாட்டான், முசலி கால்நடை வளர்ப்போர் சங்கமானது (LIBCO) ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ரூபா 500 வீதம் 151 பயனாளிகளுக்குமாக ரூபா 75,500 அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத எப் பெறுமதியும் பயனாளிகளிடமிருந்து அறவிட முடியாது | உரியவர்களுடன் கலந்துரையாடி காலக்கிரமத்தில் பதில் வழங்கப்படும் |

## 2.5 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் சிறு ஆடைக் கைத்தொழில் அமைப்பதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மன்னார் மாவட்ட செயலகத்திற்குட்பட்ட 15 தையல் நிலையங்களில்பெரியகமம் மற்றும் பனங்கட்டுகொட்டு ஆகிய இரண்டு தையல் பயிற்சி நிலையங்களும் 28 பெப்ரவரி 2019 திகதி வரை ஆரம்பிக்கப்படாமல் இருந்ததுடன் குறித்த இரண்டு தையல் பயிற்சி நிலையங்களுக்கும் உரிய 152 எண்ணிக்கையிலான தையல் இயந்திரங்கள் மற்றும் தளபாடங்கள் குறித்த நிலையங்களில் காணப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் இயந்திரங்கள் கையளிக்கப்பட வேண்டும் | தற்போது உரிய இயந்திரங்கள் வழங்கப்பட்டு தையல் பயிற்சிகள் முடிவடைந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித்திட்டம் 2016 – நானாட்டான் பிரதேச செயலகம் - ரூபா. 22 மில்லியன் பெறுமதியில் நானாட்டான் பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டம் தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | முருங்கன் அரச கால்நடை வைத்திய அதிகாரியினால் ஒவ்வொன்றும் ரூபா 87,500 வீதம் 151 பயனாளிகளுக்குகறவை மாடுகள் (87,500 X 151) ரூபா 13,212,500 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு நானாட்டான், முசலி கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் (LIBCO) பெயரில் காசோலை எழுதப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக்கு அமைய செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது காலக்கிரமத்தல் பதில் வழங்கப்படும் |
| (ii) | முருங்கன் அரச கால்நடை வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலிற்கு அமைய நானாட்டான், முசலி கால்நடை வளர்ப்போர் சங்கத்தினால் (LIBCO) முருங்கன் அரச கால்நடை வைத்திய அலுவலக 03 ஊழியர்களின் பெயரில் ரூபா 7,525,000 பெறுமதியான காசோலைகள் எழுதப்பட்டு காசோலைகள் குறித்த ஊழியர்களால் மாற்றப்பட்டு பணம் பெற்றுக்கொண்டமையினை குறித்த வங்கி கிளை முகாமையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | வழங்குனருக்கே நேரடியாக காசோலைகள் வரையப்பட வேண்டும் | விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது காலக்கிரமத்தில் பதில் வழங்கப்படும் |
| (iii) | முருங்கன் அரச கால்நடை வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலிற்கு அமைய நானாட்டான், முசலி கால்நடை வளர்ப்போர் சங்கத்தினால் (LIBCO) 07 பயனாளிகளின் பெயரில் ரூபா 4,025,000 பெறுமதியான காசோலைகள் எழுதப்பட்டு பணம் முருங்கன் அரச கால்நடை வைத்தியரினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | பயனாளிகளின் பெயர்களிற்கு காசோலைகள் வரையப்பட முடியாது மேலும் வழங்குனருக்கு மட்டுமே நேரடியாக காசோலைகள் வரையப்பட வேண்டும் | விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலக்கிரமத்தில் பதில் வழங்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித்திட்டம் (2016) 32.5 மில்லியனில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டம் தொடர்பில் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | வாழ்வாதார உதவித்திட்டத்திற்காகக் கால்நடைகளை கொள்வனவு செய்வதற்காக மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு கால்நடை வைத்திய அதிகாரியினால் 2016 யூலை 11 ஆந் திகதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் பிரகாரம், 3-6 வயதிற்கு இடைப்பட்ட 250 - 280 Kg நிறையுடைய கறவை மாட்டின் விலை ரூபா 84,000 தொடக்கம் 90,000 வரை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த நிபந்தனைகளுக்குட்பட்ட கறவை மாடுகளை கொள்வனவு செய்வதற்காக 2 பயனாளிகளிடம் இருந்து மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 30,000 மாந்தை மேற்கு கால்நடை வைத்திய அதிகாரிக்கு வழங்கப்பட்டதாக பயனாளிகளினால் தெரிவிக்கப்பட்டு எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட முடியாது. | விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. உரிய பதில் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும். |
| (ii) | மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான வாழ்வாதாரத்திட்டத்திற்கு மாடு, ஆடு, கோழி போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக நானாட்டான் முசலி கால்நடை கூட்டுறவு சங்கத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மாந்தை மேற்கு கால்நடை வைத்திய அதிகாரியின் தனிப்பட்ட பெயருக்கு ரூபா 2,206,750 பெறுமதியான காசோலை வரையப்பட்டிருந்தது. | வழங்குனருக்கு மட்டுமே நேரடியாக காசோலைகள் வரையப்பட வேண்டும் மேலும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பதில் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும். |
| (iii) | கால்நடை வைத்திய அதிகாரியினுடைய பெயருக்கு மன்னார் இலங்கை வங்கியினூடாக ரூபா 318,000 பெறுமதிக்கு2016 செப்ரம்பர் 28 ஆந் திகதி அன்று பணம் வைப்பு | வழங்குனருக்கு மட்டுமே நேரடியாக காசோலைகள் வரையப்பட | விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடு வருகின்றது. பதில் காலக்கிரமத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருப்பது பணவைப்புச் சீட்டு பிரதியினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | வேண்டும் மேலும் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் | அனுப்பிவைக்கப்படும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ரூபா 2,516,812 பெறுமதியான 121 காசோலைகள் மோசடியான முறையில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் முகாமைத்துவ உத்தியோகத்தரால் 2014 தொடக்கம் 2017 வரை எடுத்துக்கொண்ட பணம் தொடர்பில் ரூபா 1,809,827 பெறுமதியான 80 காசோலைகள் பிரதேச செயலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலும் ரூபா 706,985 பெறுமதியான 41 காசோலைகள் 30 ஏப்ரல் 2019 வரை அப் பிரதேச செயலகத்தினால் உறுதிப்படுத்தி வழங்கியிருக்கவில்லை. மேலும் இம் மோசடி தொடர்பிலான மாவட்ட செயலகத்தின் தொடர் நடவடிக்கைகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | மோசடி தொடர்பில் உரிய தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் அரச நிதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | ஆரம்ப புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள் ளது. அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல் பெறப்பட்டதும் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்றிட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

மன்னார்மாவட்டச் செயலகத்தினால் சில செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டுக்கான கம்பெரலிய திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து செயற்படுத்த வேண்டிய 43 வரையான செயற்திட்டங்களில் ரூபா 9 மில்லியன் பெறுமதியின் 04 செயற்திட்டங்கள் நானாட்டான் பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் தாமதமின்றி குறித்த காலப்பகுதிக்குள் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் | சில வேலைத் திட்டங்கள் வருட இறுதியில் வழங்கப்படுவதனாலும் பருவ மழை காரணமாகவும் கைவிடப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டுக்கான கம்பெரலிய திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து செயற்படுத்த வேண்டிய 60 வரையான செயற்திட்டங்களில் 6.57 மில்லியன் பெறுமதியான 06 செயற்திட்டங்கள் மன்னார் பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் தாமதமின்றி குறித்த காலப்பகுதிக்குள் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது சில வேலைத் திட்டங்கள் வருட இறுதியில் வழங்கப்படுவதனாலும் பருவ மழை காரணமாகவும் கைவிடப்பட்டது |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

மன்னார் மாவட்டச் செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட பணிகளில் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு நலன்கள் அடையப்படாமை தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு வாவியுடனான கிராம அபிவிருத்தித்திட்ட வேலை தொடர்பான ரூபா. 2,910,000 செலவில் மன்னார் பிரதேச செயலகத்தினால் அமைக்கப்பட்ட எருக்கலம்பிட்டி கடற்பாதை மற்றும் எருக்கலம்பிட்டி ஆமைப்படுக்கை படகுத்துறை பாதை தொடர்பில், உண்மையாக நிறைவேற்றப்பட்ட வேலையின் அளவீட்டிற்கும் கொடுப்பனவிற்கும் இடையே ரூபா 1,674,732 மேலதிகமாகவேறுபாடு காணப்பட்டது. | உரிய விசாரணை மேற்கொண்டு மேலதிக தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | விசாரணை மேற்கொண்டு மேலதிக கொடுப்பனவு அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.3 பெறுகைகள்**

மன்னார் மாவட்டச் செயலகத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த பெறுகைகள் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித்திட்டம் (2016) தொடர்பில், 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டி நெறியின் 6.3.3 தொடக்கம் 6.3.7 வரையான பிரிவுகளின் பிரகாரம் | பெறுகை வழிகாட்டு கைந்நூலை கவனத்திற் கொண்டு பெறுகை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் உரிய அலுவலர்களுக்கு பெறுகை நடைமுறை பற்றிய அறிவை வளர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பகிரங்க விலைக்கேள்வி முறைகள் பின்பற்றப்படாது 03 வகையான வாழ்வாதார உதவித்திட்டங்களுக்கு ரூபா 22,000,000 பெறுமதியான கால்நடைகள் மற்றும் தகரம் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டது. | | |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டி நெறியின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிராந்திய பெறுகைக் குழுவினால் ரூபா 10 மில்லியன் பெறுமதி வரையும் பெறுகை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது ஆயினும் பெறுகை வழிகாட்டிக்கு முரணாக ரூபா 22 மில்லியன் பெறுமதியான கால்நடைகள் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது நானாட்டான் பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்து. | பெறுகை வழிகாட்டு கைந்நூலை கவனத்திற் கொண்டு பெறுகை நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் உரிய அலுவலர்களுக்கு பெறுகை நடைமுறை பற்றிய அறிவை வளர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | 2006 ஆம் பெறுகை வழிகாட்டி நெறிகளின் 8.9.1 (ஆ) பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட கொள்வனவுகளிற்கு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு முரணாக கறவை மாடு, ஆடு, கோழிகுஞ்சுமற்றும் தகரம் என்பவற்றை கொள்வனவு செய்து விநியோகிப்பதற்காக நானாட்டான் முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துடன் (Livestock Breeder's C-operative society) ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாது நானாட்டான் பிரதேச செயலகத்தினால் ரூபா 22 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டு கைந்நூலை கவனத்திற் கொண்டு பெறுகை நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் உரிய அலுவலர்களுக்கு பெறுகை நடைமுறை பற்றிய அறிவை வளர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிராந்திய பெறுகைக் குழுவினால் ரூபா 10,000,000 மில்லியன் பெறுமதி வரையும் பெறுகை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.எனினும் ரூபா. 15,499,800 பெறுமதியான கால்நடைகளும் ஏனைய கொள்வனவுகளும் பெறுகை வழிகாட்டியை பின்பற்றப்படாது மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டு கைந்நூலை கவனத்திற் கொண்டு பெறுகை நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் உரிய அலுவலர்களுக்கு பெறுகை நடைமுறை பற்றிய அறிவை வளர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (உ) | கேள்வி நடைமுறைகள் தொடர்பில் வழங்கல் சேவைகளுக்கான கேள்விச்சபை தீர்மானங்களை கணக்காய்வு செய்த போது கேள்விச்சபை தீர்மானங்களை மேற்கொண்ட தவிசாளர் மற்றும் அங்கத்தவர்கள் என சுட்டிக்காட்டப்பட்ட உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட விடுமுறை, கடமை விடுமுறை, வெளிக்கள கடமை நேரங்களிலும் இருந்த உத்தியோகத்தர்கள் கேள்விசபைத் தீர்மானத்தை குறித்த திகதி, குறித்த நேரங்களில் நிறைவேற்றுகின்ற போது விடுமுறைகளில் இருந்த போது பிரசன்னமாக இருந்ததாகவும் விடுமுறை தினங்களில் அலுவலகத்திற்கு வந்தமைக்கான பதிவுகள் எதுவும் தினவரவு பதிவேட்டில் கையொப்பம் இடப்படாத போதும் கேள்விச்சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது கேள்விச்சபை தீர்மானத்தின் உண்மைத் தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பெறுகை வழிகாட்டு கைந்நூலை கவனத்திற் கொண்டு பெறுகை நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் உரிய அலுவலர்களுக்கு பெறுகை நடைமுறை பற்றிய அறிவை வளர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மன்னார் மாவட்டச் செயலகத்தினால் 2018 ஆம் ஆண்டில் உள்நாட்டு அலுவல்கள் நிதியினை பயன்படுத்தி ரூபா 9.4 மில்லியன் மதிப்பீட்டில் வாகனத் தரிப்பிடம், தொழில்நுட்ப பூங்கா, கலந்துரையாடல் மண்டபம் அமைத்தல் தொடர்பில் பெறுகை வழிபாட்டி 2.8.4 ற்கு அமைவாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது 3 தொடக்கம் 5 உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும் எனினும் இதற்கு முரணாக ரூபா 9.4 மில்லியன் பெறுமதியான இவ்வேலை தொடர்பாக ஒரு நபரினை மட்டுமே தொழில்நுட்ப தெரிவு குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் இவ் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் சிபார்சிற்கு அமைவாக வழங்குனரை தெரிவு செய்தமை ஒரு முரணான நடவடிக்கையாக காணப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவானது நியமிக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான பெறுகை நடைமுறைகளுக்கு முரணான நடவடிக்கைகள் தவிர்க்கப்படும் |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

மன்னார்மாவட்டச் செயலகத்தின் சொத்து முகாமைத்துவம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மாவட்ட செயலகம் மற்றும் 5 பிரதேச செயலகங்களில் கட்டுக்காப்பிலுள்ள ரூபா 334,900,000 பெறுமதியான 33 எண்ணிக்கையான வீட்டுத்திட்ட கட்டிடங்கள் வீட்டு உரிடையாளர்களால் பராமரிக்கப்படாமையினாலும், வேறு இடங்களில் வசிப்பதனாலும் மற்றும் பொருத்தமற்ற தாழ்நிலப் பிரதேசங்களில் வீட்டுத்திட்டங்களை உருவாக்கிமையினாலும் 1 | வீட்டுத்திட்டம் வழங்கல் தொடர்பில் முன்கூட்டிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மேலும்இவை பயன்படுத்தாமைக்கான உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் பயன்படுத்துவதற்கான | ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல்வேறுபட்ட தனிப்பட்ட காரணங்களினால் உரிய இடங்களில் வசிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தொடக்கம் 9 வருடங்கள் வரை இக்கட்டிடங்கள் பாவனையற்றும் பழுதடைந்தும் காணப்படுகின்றது. | நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். | |
| (ஆ) | மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் 5 பிரதேச செயலகங்களில் பாவனையிலுள்ள மற்றும் கட்டுக்காப்பிலுள்ள ரூபா 30,358,345 பெறுமதியான 17 எண்ணிக்கையான கட்டிடங்கள், இயந்திரங்கள் தொடர்பில் 2 தொடக்கம் 7 வருடங்கள் வரை பாவனையற்றுக் காணப்படுகின்றது. | பொருளாதார நோக்கங்களை அடைவதற்காக இவை பயன்படுத்த வேண்டும். | பழுதடைந்த கட்டிடங்களை திருத்தவும் அடிப்படை வசதியற்ற கட்டிடங்களுக்கு வசதி பெற்றுக்கொடுத்தும் முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மன்னார்மாவட்டச் செயலகத்தின் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கறவை மாடுகள் வழங்கப்பட்ட பயனாளிகளில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் 05 எண்ணிக்கையான பயனாளிகள் போதிய பயன் பெறப்படாமையினால் தமக்கு வழங்கிய மாடுகளை விற்பனை செய்துவிட்டு வேறு மாடுகள் கொள்வனவு செய்திருந்தமை பயனாளிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது | திட்டங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் உரிய முறையில் வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

## 3.6 பதிலளிக்கப்படாத ஐயவினாக்கள்

மாவட்டச் செயலகத்தினால் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 07 எண்ணிக்கையான கணக்காய்வு ஐயவினாக்களிற்கு மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களினால் 01 மாதம் தொடக்கம் 08 மாத காலப்பகுதி வரை பதிலளிக்கப்படாமல் காணப்படுகின்றது. | பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்களிற்குஉ ரிய காலத்தில் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | எதிர்காலத்தில் இவை தவிர்க்கப்படும் |

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

மன்னார்மாவட்டச் செயலகத்தின் முகாமைத்துவ பலவீனங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) சிறு ஆடைத் தொழிற்சாலை அமைப்பதற்கான தையல் இயந்திரம் வழங்கல், திறன் தொடர்பில், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு செயலாளரின் MIC/SME/TEX/04/01 ஆம் இலக்க 2016 யூன் 23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாவட்ட செயலாளரினூடாக பயிற்றுவிப்பாளர்கள் பயனாளிகள் மற்றும் காவலாளிகள் ஆகியோரை தெரிவு செய்து அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டிருந்த போதும் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம், நானாட்டான், மாந்தை மேற்கு, மடு மற்றும் முசலி ஆகிய ஐந்து பிரதேச செயலகங்கள் காணப்படுகின்ற நிலையில் மன்னார் நகர பிரதேச செயலகத்தில் மாத்திரம் 14 தையல் பயிற்சி நிலையங்களும் நானாட்டான் பிரதேச செயலகத்தில் 01 தையல் பயிற்சி நிலையமும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை முறையற்ற பயனாளிகள் தெரிவாகும். | திட்டங்கள் தொடர்பில் முன்கூட்டிய ஆய்வினை மேற்கொண்டு அதன் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு இடம்பெற வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. உரிய அமைச்சினால் தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் தையல் பயிற்சி வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறு ஆடைத் தொழிற்சாலை அமைப்பதற்கு 15 நிலையங்களுக்கு தையல் இயந்திரம் வழங்கல், திறன் தொடர்பில், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு செயலாளரின் MIC/SME/TEX/04/01 ஆம் இலக்க 2016 இன் 23 ஆந் திகதிய கடிதத்திற்கு முரணாக தெரிவு செய்யப்பட்ட 03 பயிற்றுவிப்பாளர்கள் இந்தியாவில் கல்வி கற்றுள்ளதோடு இலங்கை பரீட்சை திணைக்கள க.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்றியிருக்கவில்லை. | குறைந்தபட்ச தகைமையுடன் பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் மேலும் இவ்விடயம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. உரிய அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் பட்டியலின் படி தையல் பயிற்சி வழங்கப்பட்டது. |
| (இ) | மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் முகாமைத்துவ உத்தியோகத்தர் தொடர்பான ரூபா 2.5 மில்லியன் காசோலை மோசடிகள் தொடர்பில் செயலகத்தின் கணக்குப் பிரிவினரால் பயன்படுத்தப்படும் சிகாஸ்கணணி மயப்படுத்தப்பட்ட கணக்கு வைத்தல் முறைமைக்கான கடவுச் சொற்களை அலுவலர்கள் பயன்படுத்துவதற்காக ஒன்றும் பிரதான கட்டுப்பாட்டு மேற்பார்வைக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு ஒன்றுமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த ஒரு அலுவலரிடம் மாத்திரம் இவ்விரு கடவுச் சொற்களையும் கையாள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததும் பணக்கொடுப்பனவு மற்றும் வங்கி நடவடிக்கைகள் தொடர்பான கடமைகளை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்ததானது உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனமாக காணப்பட்டிருந்தது. | உள்ளக கட்டுப்பாடு முறையினைபலப்படுத்த வேண்டியதுடன் மேலும் உரிய நபர்களுக்கு கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு உள்ளக கட்டுப்பாட்டில் மிகக் கடுமையான கவனம் எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித்திட்டம் 2016 இல் 22 | | |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் நானாட்டான் பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத் தப்பட்ட திட்டம் தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 151 கறவை மாடுகளிற்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்த போதும் மாதிரிச் செவ்வை அடிப்படையில் 83 பயனாளிகளின் கறவை மாடுகளை நேரடிப் பரீட்சிப்பு செய்த போது 23 பயனாளிகளின் மாடுகள் இறந்திருந்த போதிலும் 02 பயனாளிகளிற்கு மாத்திரம் காப்புறுதி இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது. மிகுதி 21 பயனாளிகளிற்கும் காப்புறுதி இழப்பீடு வழங்கப்பட்டிருக்காமையானது காப்புறுதி செய்யப்பட்ட நோக்கம் அடையப்பெற்று இருக்காததுடன் பயனாளிகளுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | காப்புறுதி இழப்பீடானது உரிய பயனாளிகளுக்கு கிடைக்கப்பெறுவதனை உரிய உத்தியோகத்தர்கள் உறுதி செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது செயலுறும் வண்ணம் காணப்படும் பயனாளிகளுக்க்கு காப்புறுதிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 22 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஆடுகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்த போதும் மாதிரிச் செவ்வை அடிப்படையில் 20 பயனாளிகளின் ஆடுகளை நேரடிப் பரீட்சிப்பு செய்த போது 13 பயனாளிகளின் 20 எண்ணிக்கையான ஆடுகள் இறந்திருந்த போதிலும் எந்த பயனாளிகளுக்கும் காப்புறுதி இழப்பீடு வழங்கப்பட்டிருக்காமையானது காப்புறுதி செய்யப்பட்ட நோக்கம் அடையப்பெற்று இருக்காததுடன் பயனாளிகளுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | காப்புறுதி இழப்பீடானது உரிய பயனாளிகளுக்கு கிடைக்க பெறுவதனை உரிய உத்தியோகத்தர்கள் உறுதி செய்ய வேண்டும் | பயனாளிகளினால் உரிய காலப்பகுதியில் தடுப்பூசி போன்ற பராமரிப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளாமையாலும் குறைந்த கால்நடைகள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தாமையாலும் பயனாளிகளுக்கு காப்புறுதி பெற்றுக் கொடுப்பதில் இடர்பாடு காணப்படுகின்றது. |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கான சேவை நிறைவேற்றுதல்

மன்னார்மாவட்டச் செயலகத்தினால் பொது மக்களுக்கான சேவை நிறைவேற்றுவதில் உள்ள பலவீனங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்னார் மாவட்ட முசலி பிரதேச செயலகப் பிரிவில் சிலாவத்துறைக் கிராமத்தின் அரச காணியை ஏற்கனவே 18 பயனாளிகளுக்கு வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் அவர்களது விண்ணப்பம் எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்கப்பட்டு SL Aquatac Internation (Pvt) Ltd எனும் தனியார் நிறுவனத்திற்கு நீர் உயிரின செய்கைக்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கியமையானது நியாயமற்ற விண்ணப்தெரிவாகும். | உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | குழு அமைக்கப்பட்டு ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு அமைச்சிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டத்திற்காகப் பயனாளிகளுக்கு ரூபா 90,000 பெறுமதிக்கு கறவை மாடு கொள்வனவு செய்யப்பட வேண்டுமென நானாட்டான் முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு (LIBCO) கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 7 பயனாளிகளுக்கு குறித்த பெறுமதியைவிட குறைவான பெறுமதியையுடைய கறவை மாடுகள் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருந்தது. | செலவு செய்யும் பணத்திற்கான பயனுறுதித் தன்மையினை உறுதிப்படுத்தி கொள்வனவு இடம் பெறவேண்டும் | முறையற்ற இக் கொடுப்பனவு தொடர்பான பிரதேச செயலாளரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. |